


28. 11. 2025

## தலைப்புச் செய்திகள்

- பிரதமர் திரு. நரேந்திரமோடியின் அழைப்பை ஏற்று ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதின் வரும் 4-ம் தேதி நம்நாட்டில் நடைபெறும், 23-வது இந்திய ரஷ்ய வருடாந்திர உச்சி மாநாட்டில் பங்கேற்கிறார்.
- இந்தியாவை நட்புறவு நாடாக தென்னாடுகள் கண்ணோக்குவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.
- டிட்வா புயலை எதிர்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் கூறியுள்ளார்.
- பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து உபரி நீர் திறந்து விடப்பட்டுள்ளதால் கொசஸ்தலை ஆற்றின் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.
- சையது மோடி சர்வதேச பேட்மிட்டன் போட்டியின் காலிறுதியில் இந்திய வீர வீராங்கனைகள் இன்று களமிறங்குகின்றனர்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖❖❖

பிரதமர்

பிரதமர் திரு. நரேந்திரமோடியின் அழைப்பை ஏற்று ரஷ்ய அதிபர் திரு. விளாடிமிர் புதின் வரும் 4-ம் தேதி நம்நாட்டில் நடைபெறும் 23-வது இந்திய ரஷ்ய வருடாந்திர உச்சி மாநாட்டில் பங்கேற்கிறார்.

இந்த மாநாட்டின் ஒருபகுதியாக ரஷ்ய அதிபர், பிரதமருடன் உயர்நிலை பேச்சுவார்த்தைகளை மேற்கொள்கிறார்.

ரஷ்ய அதிபரின் இந்திய வருகை, இருதரப்பு உறவுகளை முன்னெடுத்துச் செல்வதற்கான வாய்ப்பாக கருதப்படுகிறது.

இருநாடுகள் இடையிலான சிறப்பு கவுரவமிகு அரசியல், நட்புறவு நிலைப்பாடுகள் வலுப்படுவதோடு பரஸ்பர நலம் சார்ந்த சர்வதேச பிராந்திய பரிவர்த்தனைகளுக்கும் வழிகோலும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

மன் கி பாத்

பிரதமர் திரு. நரேந்திரமோடி அகில இந்திய வானொலியில் மன் கி பாத் மனதின் குரல் நிகழ்ச்சியில் 128-வது முறையாக நாளைமறுநாள் உரையாற்றுகிறார்.

இந்நிகழ்ச்சியில் தாம் உரையாற்ற வேண்டிய அம்சங்கள் குறித்து பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை தெரிவிக்க அழைப்பு விடுத்துள்ளார்.

நமோ செயலி, mygov.in இணையதளம் வாயிலாகவும், 1800 11 78 00 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணிலும்

தொடர்புகொண்டு மக்கள் தங்கள் கருத்துக்களை இன்று மாலைக்குள் தெரிவிக்கலாம்.

❖❖❖❖❖❖❖❖❖

ராஜ்நாத் சிங்

இந்தோ பசிபிக் பிராந்தியத்திற்கு அப்பாற்பட்ட நாடுகளும், தெற்கு பகுதியில் உள்ள நாடுகளும் இந்தியாவை நட்புறவு நாடாக கண்ணோக்குவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதில்லியில் பாதுகாப்பு பேச்சுவார்த்தைகள் தொடர்பான நிகழ்வில் இன்று உரையாற்றிய அவர், மாறிவரும் உலகளாவிய சூழலில் நம்நாடும் பல்வேறு மாற்றங்களுடன் பயணித்து வருவதாக குறிப்பிட்டார்.

விரிவடைந்துள்ள நம் பொருளாதாரம், அதிநவீன தொழில்நுட்ப முன்னேற்றம், ஜனநாயக மரபு போன்றவற்றால், நிலைத்தன்மை மற்றும் சமத்துவத்திற்கான நமது குரல் நிலைநாட்டப் பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

நாட்டின் இறையான்மை மற்றும் பாதுகாப்பு விஷயத்தில் எவ்வித சமரசத்திற்கும் இந்தியா இடமளிக்காத போதிலும், அமைதி மற்றும் அதுசார்ந்த பேச்சுவார்த்தைகளில் நம்பிக்கை வைத்திருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

நம்நாட்டின் ராணுவப்படைகள் எவ்வித சவாலையும் எதிர்கொள்ள தயாராக இருக்கும் அதே வேளையில் அவர்தம் திறமைகள் தொடர்ந்து வெளிப்படுவதாக குறிப்பிட்டார்.

அனைவரும், அனைவருக்குமான வளர்ச்சியால் மட்டுமே வளர்ச்சியடைந்த பாரத இலக்கை எட்ட முடியும் என்றும் திரு. ராஜ்நாத் சிங் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

பியூஷ்கோயல்

சுயசார்பு பாரதம் நாட்டின் ஒட்டுமொத்த தேசிய இயக்கமாக உருவெடுத்துள்ளது என்று மத்திய வர்த்தக தொழில்துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இந்திய தொழில்கூட்டமைப்பின் 98வது வருடாந்திர பொதுக்கூட்டத்தில் இன்று உரையாற்றிய அவர், நாட்டிலுள்ள ஒவ்வொரு குடிமகனும் தன்னிறைவிற்கான தொலைநோக்கு பார்வை மற்றும் பாதையில் பங்கேற்றுள்ளதாக அவர் கூறினார்.

பிரதமர் தமது சுயசார்பு பாரத தொலைநோக்கின் மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வித்திட்டிருப்பதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

அந்நிய வர்த்தக முதலீடுகளால் நாட்டின் வர்த்தக வாய்ப்புகளும், முதலீடுகளும் அதிகரித்துள்ளதாக கூறிய அமைச்சர், ஆராய்ச்சி மேம்பாடு, புதுமை கண்டுபிடிப்புகள் போன்றவற்றோடு, நவீன தொழில் நுட்பங்கள் இந்தியாவின் பொருளாதாரத்தை புதிய உச்சங்களுக்கு எடுத்துச்செல்லும் என்றும் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

சி.ஆர்.பாட்டில்

ஜல் ஜீவன் இயக்கம் ஊரக குடியிருப்புகளுக்கு பாதுகாப்பான குடிநீர் விநியோகத்தை உறுதி செய்துள்ளதாக மத்திய நீர்வளத்துறை அமைச்சர் திரு. சி. ஆர். பாட்டில் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நீர்வளம் சார்ந்த தேசிய மாநாட்டை இன்று துவக்கிவைத்து பேசியஅவர், இதன்மூலம் மதிப்பு, மரியாதையுடன் கூடிய ஆரோக்கியமான வாழ்வு ஊரகப்பகுதிகளில் உறுதிசெய்யப் பட்டிருப்பதாக எடுத்துரைத்தார்.

2 நாட்கள் நடைபெறும் இம்மாநாட்டில் நதிகளை தூய்மைப்படுத்துதல், நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துதல், கழிவுநீர் மறுசுழற்சி உள்ளிட்டவை தொடர்பாக ஆலோசிக்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

ஜோதிபா ஃபுலே

சமூக சீர்த்திருத்தவாதி ஜோதிபா ஃபுலே நினைவுதினம் இன்று கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்நாளையொட்டி மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் கல்வியே சமூக மாற்றத்தின் மையம் என்பதை வலியுறுத்தி, பெண்களை கல்வி கற்க ஊக்குவித்ததோடு, சமூக தீமைகளை போக்க அவர் ஆற்றிய அளப்பறிய சேவையை நினைவு கூர்ந்துள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர் – ஆய்வு

தமிழ்நாட்டில் டிட்வா புயலை எதிர்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முனைப்புடன் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக முதலமைச்சர் திரு.மு.க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள மாவட்டங்களின் ஆட்சியர்களுடன் காணொலி வாயிலாக இன்று ஆலோசனை மேற்கொண்டு உரிய அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாக குறிப்பிட்டார்

அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து பணியாற்ற உத்தரவிடப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்

8 மாவட்டங்களுக்கு நியமிக்கப்பட்ட கண்காணிப்பு அதிகாரிகள் அப்பகுதிகளுக்கு விரைந்துள்ளதாகவும் முதலமைச்சர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖❖

கே.என்.நேரு

டிட்வா புயல் எச்சரிக்கையை கருத்தில் கொண்டு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளும் முழுவீச்சில் மேற்கொள்ளப் பட்டுள்ளதாக மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு கூறியிருக்கிறார்.

நெல்லையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், சென்னையில் 15 முதல் 20 சென்டி மீட்டர் வரை மழை பெய்தாலும், வெள்ள நீர் 4 முதல் 5 மணி நேரத்தில் வடியும்

வகையில் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

முன்னதாக பொருநை அருங்காட்சியகத்தில் நடைபெறும் இறுதிக்கட்டப்பணிகளை அவர் ஆய்வு செய்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

மா.சுப்ரமணியன்

தமிழ்நாட்டில் அனைத்து மருத்துவமனைகளிலும் புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப் பட்டுள்ளதாக மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், அனைத்து மருத்துவமனைகளிலும், மருத்துவர்கள் முழு நேரமும் பணியில் இருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

புயல்

தென்மேற்கு வங்க கடலில் சென்னைக்கு தெற்கே 530 கிலோ மீட்டர் தொலைவிலும், புதுச்சேரிக்கு 430 கிலோ மீட்டர் தொலைவிலும் டிட்வா புயல் தற்போது மையம் கொண்டுள்ளதாக சென்னை வானிலை ஆய்வுமையம் தெரிவித்துள்ளது.

தஞ்சை, நாகை, திருவாரூர், புதுக்கோட்டை, ராமநாதபுரம் மாவட்டங்களில் இன்று அதி கன மழையும்,

துத்துக்குடி, சிவகங்கை, அரியலூர், மயிலாடுதுறை மற்றும் காரைக்காலில் மிக கனமழையும்,

கன்னியாகுமரி, திருநெல்வேலி, விருதுநகர், திருச்சி, மதுரை, பெரம்பலூர், கடலூர் கனமழை பெய்யக்கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நாகை, திருவாரூர், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, கடலூர் மாவட்டங்களுக்கு தேசிய பேரிடர் மீட்புப்படையினர் விரைந்துள்ளனர்.

தஞ்சாவூர் மாவட்டத்திற்கு ஆவடியிலிருந்து 30 பேர் கொண்ட தமிழ்நாடு பேரிடர் மீட்புக் குழுவினர் சார்பு ஆய்வாளர் அனுஷியா தலைமையில் தஞ்சை வந்தடைந்துள்ளனர்.

தேசிய பேரிடர் மீட்பு படையில் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள லைக்கா மற்றும் ராம்ப்போ என்ற மோப்ப நாய்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளது.

கனமழை காரணமாக மயிலாடுதுறை, திருவாரூர், புதுக்கோட்டை மாவட்டங்களில் இன்று மதியம், பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக கடலூர் மாவட்ட பள்ளி கல்லூரிகளுக்கு நாளை விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

ராமேஸ்வரம் பகுதியில் கடல் சீற்றத்துடன் காணப்படுகிறது.

பலத்த காற்று காரணமாக கன்னியாகுமரி – ராமேஸ்வரம்,

சென்னை ராமேஸ்வரம் ரயில்கள் மண்டபத்திலிருந்து இயக்கப்படுகின்றன.

புயல் காரணமாக தூத்துக்குடி, நாகை துறைமுகங்களில் 4- ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப் பட்டுள்ளது.

பூண்டி நீர்த்தேக்கத்திலிருந்து உபரி நீர் திறந்து விடப்பட்டுள்ளதால் கொசஸ்தலை ஆற்றின் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

முன்னாக தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா இசை மற்றும் கவின் கலை பல்கலைக்கழத்தின் பட்டமளிப்பு விழாவில் ஆயிரத்து 846 மாணாக்கருக்கு பட்டங்களை அவர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய முதலமைச்சர், மதுரையில் கிராமிய கலைப்பயிற்சி பள்ளி அமைக்க அரசு சார்பில் நிலம் ஒதுக்கப்படும் உள்ளிட்ட 4 அறிவிப்புகளை வெளியிட்டார்.

திரைப்பட நடிகர் சிவகுமாருக்கு வாழ்நாள் சாதனைக்கான டாக்டர் பட்டத்தையும் முதலமைச்சர் வழங்கி கவுரவித்தார்.

❖❖❖❖❖❖❖❖❖

ராஜேந்திரன்

தமிழ்நாட்டில் கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்பு உள்ளிட்ட 13 துறைகளில் தமிழகம் முன்னோடி மாநிலமாக உருவெடுத்துள்ளது என்று மாநில சுற்றுலாத்துறை அமைச்சர் திரு. ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

சேலம் மாவட்டம் ஓமலூரில் பள்ளிகளுக்கு இடையேயான கலைத்திருவிழாவை இன்று துவக்கி வைத்து பேசியஅவர், கல்வித்துறைக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் கடந்த 4 ஆண்டுகளில் 2 லட்சம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக கூறினார்.

மாணாக்கரின் தனித்திறமையை வெளிக்கொணர்ந்து மெருகூட்டும் வகையில் கலைத்திருவிழாக்கள் நடத்தப்படுவதாக அமைச்சர் எடுத்துரைத்தார்.

இப்போட்டியில் முதல் 20 இடங்களை பிடிக்கும் மாணாக்கர் வெளிநாடுகளுக்கு கல்வி சுற்றுலா அழைத்து செல்லப்பட இருப்பதாகவும் கூறினார்.

❖❖❖❖❖❖❖❖❖

கீதாஜீவன்

தூத்துக்குடி மாவட்டத்தில் மாற்றுத் திறனாளிகளுக்கு உதவி உபகரணங்கள் வழங்குவதற்கான தேர்வு முகாம்

நாளை நடைபெறும் என்று மாநில சமூக நலத்துறை அமைச்சர் திருமதி. கீதாஜீவன் கூறியுள்ளார்.

இம்முகாம்களில் பங்கேற்று தேவையான உபகரணங்களை பெற்று பயன்பெற அவர் அறிவுறுத்தியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

இருவரி

தமிழ்நாட்டின் அனைத்து வக்ஃப் வாரியம் தொடர்பான விவரங்களை அதன் நிர்வாக குழு உறுப்பினர்கள் வரும் 4-ம் தேதிக்குள் இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளனர்

சென்னை அண்ணா நிர்வாக பணியாளர் கல்லூரியில் 87-வது வேளாண் விஞ்ஞானிகள் மற்றும் விரிவாக்க அலுவலர்களுக்கான கருத்தரங்கை மாநில வேளாண் அமைச்சர் திரு. MRK பன்னீர் செல்வம் இன்று தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில் நாட்டிய விழாவை மாநில பால்வளத்துறை அமைச்சர் திரு. மனோ தங்கராஜ் சென்னையில் இன்றுமாலை தொடங்கிவைக்கிறார்.

சமூக ஊடகங்களில் உள்ள போலி செய்திகளை தவிர்க்க வேண்டும் என்பதை வலியுறுத்தி திருச்சியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளி மாணாக்கர் பங்கேற்ற பேரணி இன்று நடைபெற்றது.

❖❖❖❖❖❖❖❖❖

S.I.R.

ராமநாதபுரம் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் முழுவீச்சில் நடைபெறுவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சிம்ரன் ஜித் சிங் காலோன் தெரிவித்துள்ளார்.

.. வாய்ஸ் ..

திருவாரூர் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மோகன சுந்தரம் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖❖

பேட்மிட்டன்

லக்னோவில் நடைபெறும் சையது மோடி சர்வதேச பேட்மிட்டன் சாம்பியன் போட்டியின் காலிறுதியில் இந்திய வீர வீராங்கனைகள் இன்று களமிறங்குகின்றனர்.

ஆடவர் ஒற்றையர் காலிறுதியில் இந்தியாவின் கிடாம்பி ஸ்ரீகாந்த் – சக வீரர் பிரியான்ஷு ரஜாவத்தை இன்று எதிர்கொள்கிறார்.

மகளிர் இரட்டையர் பிரிவில் பிரியா, ஸ்ருதி மிஸ்ரா இணை – மலேசிய இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖❖❖

ஹாக்கி

உலக கோப்பை ஜூனியர் ஹாக்கி போட்டிகள் தமிழகத்தில் இன்று தொடங்கின.

மதுரையில் இன்று நடைபெற்ற முதல் போட்டியில் Group – A பிரிவில் நடப்பு சாம்பியன் ஜெர்மனி – தென்னாப்பிரிக்காவை 4-0 என்ற கோல்கணக்கில் தோற்கடித்தது.

சென்னையில் Group – B பிரிவில் இந்தியா - சிலி உடன் இன்றிரவு 8.30 மணிக்கு மோதுகிறது.

❖❖❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖❖❖